அசல்

12.3.1921 ஆர். ஆதிசேடன்

அசல் - 1 நகல் - 1

உ

சிவமயம் தேத்தாகுடி வடக்குசேத்தி

12-3-1921

மகாஸ்ரீ.

மகாகனம் பொருந்திய ஆசிரியருக்கு (அடியேன்) ஆதிசேடனாகிய அருந்தமிழ்த் தொண்டன் அனேக கோடி நமஸ்காரம்.

தாங்கள் வரைந்த திருமுகம் என்னிடம் கிட்டியது. கண்டு களிகூர்ந்தேன். கடிதம் வந்து சேர்ந்து சுமார் பத்து தினங்களுக்கு மேலாகியும் தாமதமாய்ப் பதில் எழுதினதைப் [illegible] மன்னிக்கவும்.

என்னைத் தாங்கள் மக்களிலொருவனாய்ப் பாவிக்கவேண்டும். கண்ணில்லாதவனுக்குக் கண்ணைத் திறந்து விட்டால் எவ்வளவோ புண்ணியமென்று சொல்வர் மேலோர். அதைத் தாங்களுக்கு யான் சொல்லவேண்டியதில்லை. தாங்கள் காலால் சுட்டிக் காட்டி எவ்வேலையைச் செய்யென்று சொன்னாலும் அதைத் தவறாமல் செய்யக் காத்திருக்கிறேன். தாங்களிடத்தில் யான் ஒருவரம் பெற்றால் எளிதில் ஞானத்தைப் பெறுவேன். என்னை எப்பொழுது அன்னை அப்பன் போல் தாங்களிடம் அழைத்துக்

அசல்

✓ 12.3.1921 ஆர். ஆதிசேடன்

அசல் —1 நகல் —1

கொள்வீர்களென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்
கிறேன். என் பேரில் கிருபை வைக்க வேண்டும்.
நான் மனது சந்தோஷமடைய யாதொரு பதி
லையு மெழுதக் காட்டேனென்கிறீர்கள். எல்லா
வற்றிற்கும் சொன்னீர் வேண்டும். கூடிய
சீக்கிரத்தில் மேசந்தோஷமானமதுடன் எதிர்பார்க்
கிறவனும் தங்கள் மேல் சதா அன்பும் கீர்ப்பது
தாழ்மையவனுமாகிய,

ஆர். ஆதிசேடன்,

தேத்தாகுடி,

(வழி) தோப்புத்துறை

நானு தங்களை ஆசிரியராக பாவித்துவிட்டேன்
என்னைக் கைவிடாதீர்கள். அடைக்கலம்
புகுந்தவனை யாதரிப்பது அறிவோர்
கடமையாகும். இது நும் புலம்பல்
லுக்குத் தகுதியும்.

நகல்

உ

தேத்தாகுடி-வடக்கு-
சிவமயம் தேதி 12-3-1921

மஹா-ள-ள-ஸ்ரீ மகாகனம் பொருந்திய ஆசிரியருக்கு அடியேன் ஆதிசேடனாகிய அருந்தமிழ்த் தொண்டன் அநேக கோடா நமஸ்காரம்

தாங்கள் வரைந்த திருபம் எண்ணிட்டமயக் கண்டு களிக்கிறேன். கடிதம் வந்து சேர்ந்து சுமார் பத்து தினங்களுக்கு மேலாகியும் தாமதமாய்
பதில் எழுதினதைப் பற்றி மன்னிக்கவும்.

என்னைத் தங்கள் மக்களில் ஒருவராய்ப் பாவிக்க வேண்டும். கண்ணில்லாதார்க்குக் கண்ணைத் திறந்து விட்டால் எவ்வளவோ புண்ணியமென்று சொல்வர் மேலோர். அதைத் தங்களுக்கு யான் சொல்ல வேண்டியதில்லை. தங்களாலான சட்டைக்காட்டு எவ்வேலையைச் செய்யவென்று சொன்னாலும் அதைத் தடையில்லாமல் செய்யக் காத்திருக்கிறேன். தங்களிடத்தில் யான் ஒருவேளை யிருந்தால் எனது ஞானத்தைப் பெறுவேன். என்னை எப்போது மனமிரங்கித் தங்களிடம் அழைத்துக் கொள்வீர்களென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். என் பேரில் கிருபை வைக்க வேண்டும். நான் மனது சந்தோஷமடைய யாதொரு பதிலு மெழுதமாட்டீர்களென்கிறீர்கள் எல்லாவற்றுக்கும் சீக்கிரம் வேண்டும். கடையேனுக்கிரக்கத்தில் ஒரு சந்தோஷமான பதிலை எதிர்பார்க்கிறவனும் தங்கள் மேல் சதா அன்பும் கீழ்ப்படிதலுமுடையவனுமாகிய

ஆர். ஆதிசேடன்
தேத்தாகுடி
(வழி) தோப்புத்துறை

நான் தங்களை ஆசிரியராகப் பாவித்துவிட்டேன். என்னைக் கைவிடாதீர்கள். அடைக்கலம் புகுந்தவரை யாதரிப்பது அறிவோர் கடமையாகும். திருத்தும்படியும் பலதுக்கிருந்த உதவும்

நகல்

உ

12-3-1921

ஸ்ரீ. சுப்பிரமணியன்

130